தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

MCOP. No.107/2023

PW : 1

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A., M.L., Ph.D., தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சுவாமிநாதன் | த / பெ. | : | திரு. சுப்ரமணியன் |
| கிராமம் | : | திருச்சி | தாலுக்கா | : | திருச்சி |
| தொழில் | : | அரசு அலுவலர் (ஓய்வு) | வயது | : | 61 |

06.03.2026

முதல் விசாரணை

நான் இந்த மனுவில் 1 ம் மனுதாரர் ஆவேன். நான் மனுதாரர் தரப்பில் சாட்சி 1 ஆக சாட்சியமளித்துள்ளேன். எனது தரப்பில் எழுத்துமூல நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மையானவை. அவை என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) 17.09.2021 ஆம் தேதிய **முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 16.09.2021 ஆம் தேதிய **காயச்சான்றிதழ் சான்று நகல் ம.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 20.09.2021 ஆம் தேதிய **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை சான்று நகல் ம.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 20.09.2021 ஆம் தேதிய **என்னுடைய தகப்பனார் சுப்ரமணியனின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் ம.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 29.09.2021 ஆம் தேதிய **என்னுடைய தகப்பனாரின் இறப்பு சான்று நகல் ம.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 27.10.2021 ஆம் தேதிய **என்னுடைய தகப்பனாரின் வாரிசு சான்று நகல் ம.சா.ஆ. 6** குறியீடு செய்யப்படுகிறது.

7) 29.01.2021 ஆம் தேதிய **1 ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்குரிய ஆர்.சி.புக் நகல் ம.சா.ஆ. 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 30.01.2021 ஆம் தேதிய **2 ம் எதிர்மனுதாரரின் காப்பீடு பாலிசி நகல் ம.சா.ஆ. 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 13.02.2021 ஆம் தேதிய **1 ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) **1 முதல் 4 மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ. 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) **என்னுடைய தகப்பனாரின் பென்சன் புக் நகல் ம.சா.ஆ. 11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12) 21.09.2021 ஆம் தேதிய **MV Report சான்று நகல் ம.சா.ஆ. 12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13) 1 முதல் 4 மனுதாரர்களின் **வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ. 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**என் சாட்சியத்தை ஏற்று இம்மனுவை தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து சமயத்தில் நான் அங்கு இல்லை. என் தந்தை பயணம் செய்த வாகனம் 1ம் எதிர்மனுதாரரான என் தம்பிக்கு சொந்தமானது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் என் அப்பாவும் அம்மாவும் இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். விபத்தின் போது 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யவில்லை என்றால் சரியல்ல.

விபத்து சம்பந்தமாக 1 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் மது அருந்திவிட்டு வாகனத்தை இயக்கியது தான் காரணம் என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமான குற்ற வழக்கு ஆவணங்களை ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேனா என்றால் ஏற்கனவே ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த விபத்திற்கு 1 ம்எதிர்மனுதாரர் முழு காரணம் என்றாலும், 1 ம் எதிர்மனுதாரர் தான் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டஈடு மிக அதிகம் என்றாலும், 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.03.06 11:09:26 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்